# இரா. நடராசனின் புனைவுகளில் உளவியல்சார் தற்காப்பு நடத்தைகள்

*ம. கண்ணன்*
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்*
*திருச்சிராப்பள்ளி*

மக்களின் வாழ்வில் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளிலும் அவர்களின் மனத்தின் அடியாக இருந்து உளவியல் சார்ந்த கருத்துகள் திகழ்கின்றன. மனத்தைச் சார்ந்த உளவியல் கூறுகள் - பல நோய்களுக்கு அடிப்படையாக உள்ளன. அந்நிலையில் அவர்களைக் காக்க தற்காப்பு நடத்தைகள் பெரிதும் உதவுகின்றன. அத்தகைய தற்காப்பு நடத்தைகள் என்னும் கூறுகள் இரா. நடராசனின் புனைகளில் காணப்படுகின்றன. உளவியல் என்பது ஒருவரிடம் காணக்கூடிய புறச்செயல்களையும் சிந்தனையால் ஏற்படும் அகச்செயல்களையும் உள்ளடக்கி அமைவதாகும். இதற்கான வரையறையை, “மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன் மூலம் அவை, எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும், சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியலாகும்”. (உளவியல், ப.5) என்று உளவியலாளர் குறிப்பிடுவதைச் சுட்டுகிறார் கி. நாகராஜன். தற்காப்பு நடத்தைகளை ஆசிரியரும் மாணவரும் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. ஆசிரியர் வழங்கும் தண்டனை தவறான முடிவுகளுக்கு வழிவகுக்கும் என்பதையும் உணர்த்துகின்றது.

**தற்காப்பு நடத்தைகள்**

ஒருவர் சூழலினால் ஏற்படும் மனஇறுக்கத்தைச் சமாளிப்பதற்காக மேற்கொள்ளும் ஒருவகை உத்தியே தற்காப்பு நடத்தை என்பதாகும். “வேட்கைகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தாவிடில் புறவுலகிற்கும் தமக்கும் கேடு விளையும் என்பதால் நனவிலிக் கருத்துக்களில் இருந்து தம்மையும் தாம் சார்ந்த சமூகத்தையும் காத்துக் கொள்ள வேண்டுவதற்காக ஈகோ பல நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இவற்றையே தற்காப்பு செயல்கள் அல்லது தற்காப்பு இயக்கங்கள்” என்பார் ஃப்ராய்ட் (சிக்மண்ட் ஃப்ராய்ட், ப.336) என்று தற்காப்பு நடத்தைக்கான விளக்கத்தைத் தருகிறார் தி.கு. இரவிச்சந்திரன். உளப்பகுப்பாளர்கள் தற்காப்பு நடத்தைகளைப் பலவகையாகப் பிரிக்கின்றனர். இதனைப் ‘பொருத்தப்பாடற்ற நடத்தை’ என்றும் கூறுவர். இவை கவலைகள், அவமானம், குற்ற உணர்ச்சி போன்றவற்றிலிருந்து பாதுகாக்கின்றன. தற்காப்பு நடத்தைகள் ஒருவரை நெருக்கடியான நிலையிருந்து காப்பாற்றி அவரது சுயகௌரவம் பாதிக்காத வண்ணம் தப்பிப்பதற்கு உதவுகின்றன. உளவியலாளர்கள் குறிப்பிடுகின்ற தற்காப்பு நடத்தைகள் சில இரா. நடராசன் புனைவுகளில் காணப்படுகின்றன. 1. காரணம் புனைந்துரைத்தல் 2. நசுக்குதல் 3. பின்வாங்குதல் 4. ஈடுசெய்தல் என்பவை உள்ளடக்கமாக அமைந்துள்ளன.

**1. காரணம் புனைந்துரைத்தல்**

ஆசிரியை தனக்குப் பதில் தெரியவில்லை எனில் அச்சூழலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஏதோ ஒரு பொருளை உரைத்துவிட்டுத் தப்பித்துகொள்ள முயல்கிறார். காந்தவியல் பற்றிய கேள்வியின்பொழுது,

**மிஸ்... அந்தக் காந்தத்தை ரெண்டா வெட்டினா என்ன ஆகும் மிஸ்?**

காந்தத்தைப் பற்றி யோசித்து மூன்று நிமிட அவகாசத்திற்குப் பிறகு சற்று பொறி தட்டியது. “ரெண்டு காந்தம் கிடைக்கும்” சரி பதில் சொல்லியாகிவிட்டது. (ஆயிஷா, ப.6) என்று கூறுவதினால் ஏதோ காரணத்தைச் சொல்லித் தப்பித்த ஆசிரியையின் நிலையைப் புலப்படுகின்றது.

மேலும் பெண்ணின் குணங்கள் மேலோங்கிய ஆண்மகனான கமலக்கண்ணனுக்கு பெற்றோரால் திருமணம் செய்யப்படுகிறது. ஆனால் அவனால் நிறைவான வாழ்வை வாழமுடியாது வெளியூர்

சென்றுவிடுகிறான். அவனின் குணத்தை அறிந்த அவனது மனைவி அதனை ஏற்றுக்கொண்டாலும் அவனால் இருக்கமுடியாது வீட்டைவிட்டு வெளியேறுகிறான். எனினும் அனைவரிடமும் அவன் வெளிநாடு சென்றுவிட்டதாகக் கூறுவதை, "துபாய்க்கு வேலை கிடைத்து உன் கணவன் போய்விட்டதாக ஊரையும் என் பெற்றோரையும் நீ பிறகு நம்ப வைக்கும்படி நான் ஓடிப்போனேன்" (இரா.நடராசன் சிறுகதைகள், ப.22) என்று பால்திரிபு என்னும் சிறுகதையில் தனக்கு ஏற்பட்ட நிலையினைச் தெரிவிக்காது சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணமாகத் துபாய் வேலைக்குச் சென்றுவிட்டதை உரைக்கின்றது. இக்கருத்தினை உளவியல்ரீதியில் காணும்போது, "தனது தவறுகளுக்கும் இயலாமைக்கும் உரிய உண்மைக் காரணத்தைத் தவிர்த்து, சமுதாயத்தால் ஒப்புக்கொள்ளக்கூடிய பொருத்தமான காரணத்தைக் தேடிக் கண்டுபிடித்துக் கூறுதலே காரணம் புனைந்துரைத்தல் ஆகும்" (உளவியல், ப.407) என்று கொள்ளலாம்.

**2. நசுக்குதல்**

தனக்கு ஏற்படுகின்ற இன்னல்களிலிருந்து மீள்வதற்கும், அத்தகைய செயலினால் ஏற்பட்ட மனஇறுக்கத்தினை நனவு மனநிலையிலிருந்து நீக்குவதற்கும் பயன்படுவது நசுக்குதல் என்னும் தற்காப்பு நடத்தையாகும். இது ஆயிஷாவின் எண்ணத்தின் வழியே புலனாகிறது. ஆயிஷா ஆசிரியர்களின் அடியிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள நினைக்கிறாள். அப்படியே அடித்தாலும் வலிக்காத நிலையினைத் தான் அடைய வேண்டும் என்று எண்ணுகிறாள். இதனை, "மருந்து மிஸ்… மரத்துப்போகிற மருந்து… இனிமே யாரு அடிச்சாலும் எனக்கு வலிக்காது மிஸ் எப்படி வேணும்னாலும் அடிச்சிக்கட்டும்" (ஆயிஷா, ப.21) என்று கூறுவதனால் அறியமுடிகிறது. அவளது உள்ளத்திலிருந்து ஆசிரியை அடித்தல் என்னும் நிகழ்வை நீக்க நினைக்கிறாள். மற்றொரு சான்றாக திருட்டுத் தொழிலைச் செய்து கொண்டிருக்கும் ஒருவன் வாழ்க்கையில் பட்ட அனுபவங்களினால் திருந்தி வாழ எண்ணுகிறான். ஆனால் சமுதாயம் அவனை திருடனாகவே பார்க்கின்றது. அவர்களின் பார்வையில் களவாணியாக ஒதுக்கிவைத்துத் தனிமைப்படுத்தப்பட்டவனாக மாற்றப்படுகிறான். அவனின் தாயின் மனமும் மாற்றம் அடைவதால் மனம் உடைந்தவன் அந்நிலையிலிருந்து மீள்வதற்கு தற்கொலை செய்து கொள்ளத் துணிகிறான். "எனக்கு அவர்களிடமிருந்து விடுதலை கொடு… உனது எல்லையற்ற கரங்களால் உனக்குள் என்னை மூழ்கடித்துக் கொண்டுவிடு… நீயும் கைவிட்டு விடாதே… கடலே…" (இரா.நடராசன் சிறுகதைகள், ப.44)என்று 'களவாணி' என்னும் சிறுகதையில் அனைத்துக் குற்றங்களுக்கும் காரணமாகக் கருதும் ஒருவன் மக்களிடமிருந்து விடுபடுவதற்குக் கடலில் மூழ்கி உயிரைவிட முயல்கிறான். இத்தகைய மனநிலையைப் பற்றி, "தொந்தரவைக் கொடுக்கும் அனுபவம், நினைவுகள், எண்ணங்கள் யாவும் நனவு மனநிலையிருந்து அடிமனமான நனவிலி மனநிலைக்குத் தள்ளப்பட்டு மீண்டும் மேல்மனதிற்கு வராதபடி தளர்த்தலையே நசுக்குதல் என்கிறோம். உள்ளத்தில் ஏற்படும் மனப்போராட்டத்தை நீக்குவதே நசுக்குதலின் குறிக்கோளாகும்"(உளவியல், ப.412) என்று கி. நாகராஜன் குறிப்பிடுகிறார்.

**3. பின்வாங்குதல்**

ஒருவர் தனக்குத் தோல்வி ஏற்படும் என்று தோன்றும் நிலையில் அத்தகைய சூழலிருந்து விலகிச்செல்லுதலைப் பின்வாங்குதல் என்பர். இத்தகைய தற்காப்பு நிலையைப் பலரும் தமது வாழ்வினில் சந்தித்திருக்ககூடும். ஆயிஷா கேள்விகேட்கும் சூழ்நிலையில் அதற்கு உரிய பதிலை உரைக்கமுடியாத ஆசிரியை அச்சூழலிருந்து விலகிச்செல்கிறார். "ஏதேதோ பாவனையாகப் பேசிக்கொண்டு குறுக்கு நெடுக்காக மணி அடிக்கும்வரை அலைந்துவிட்டு வகுப்பிலிருந்து வெட்கமில்லாமல் மிடுக்காக வெளியேறினேன்" (ஆயிஷா, ப.6) என்று ஆசிரியை உரைக்கும் நிலையில் அவரது விலகிச்செல்லும் போக்கினைக் காணமுடிகின்றது. இது ஆசிரியையின் தற்காப்பு நடத்தையைக் குறிக்கின்றது. இப்போக்கினை "மனமுறிவு அல்லது தோல்விகளை உண்டுபண்ணும் சூழ்நிலையிலிருந்து ஒருவன் விலகிக்கொள்ளும் முறையைப் பின்வாங்குதல் என்று கூறுகிறோம்"(உளவியல், ப.411) என்று உளவியலாளர்கள் உரைப்பதன் மூலம் ஆசிரியையின் நடத்தையை உணரமுடிகிறது.

**4. ஈடுசெய்தல்**

தன்னிடம் உள்ள ஒரு குறையினை ஈடுசெய்ய மற்றொரு செயலில் தனது ஆற்றலைச் செலுத்துவது ஈடுசெய்தலாகும். இதனை, "தன்னிடம் காணப்படும் ஒரு குறைப்பாட்டிற்கு ஈடுசெய்யும்

வகையில் தன் சக்தி முழுவதையும் வேறொரு செயலில் செலவிட்டு வெற்றி காண விழைவது அல்லது ஒரு முறையில் ஏற்படும் மனமுறிவினைப் போக்கி வேறொரு துறையில் அதிக ஈடுபடுவது போன்றன ஈடுசெய்தலாகும்" (உளவியல், ப. 400) என்று கி. நாகராஜன் விளக்குகிறார். எடுத்துக்காட்டாக பார்வையற்றவனாக இருப்பினும் பல திறமைகளைத் தன்னுள்ளே கொண்டுள்ளதால் அவனை கலீலியோ அருமைராஜன் என்று அழைக்கின்றனர். கலீலியோ போன்று பார்வையற்றவனாகவும், மீத்திறன்மிக்கவனாகவும் இருப்பதால் அப்பெயர் வழங்கலாயிற்று. பார்வையற்றவனாக இருப்பினும் தன்னுடைய திறனை வெளிக்காட்டத் தயங்காது செயல்படுகிறான்.

"அவரைப் போலவே உக்கிரமாய் அறிவியலை ஆழ்ந்து அதிலேயே மூழ்கி முத்தெடுக்க தன் வாழ்வையே அர்ப்பணித்தவன் அருமைராஜன். கலீலியோவைப் போலவே பார்வை இல்லாதவனான அவன்தனது பெயரையே கலீலியோ அருமைராஜனாகக் கொண்டது பொருத்தம்தானே" (பூஜ்ஜியமாம் ஆண்டு, ப.28) என்னும் கூற்றினால் அருமைராஜனின் பார்வையில்லாதத் தன்மையை அவனது அறிவியல் சமன் செய்வதை அறிமுடிகின்றது.

தன்னிடம் காணப்படும் ஒரு குறைப்பாட்டிற்கு இணையான வகையான வேறொரு செயலில் ஈடுபட்டு அதன் குறையை நீக்கி கொள்ளுதலை 'ஈடுசெய்தல' என்கிறோம். ஆயிஷா ஒப்பனை ஏதுமின்றி இருப்பினும் படிப்பினில் தேர்ந்தவளாகக் காணப்படுகிறாள். ஆயிஷாவின் தோற்றத்தை ஆசிரியர், "பற்கள் துருத்தியபடி முகத்தில் வந்து விழுகின்ற கேசத்தைக பற்றிய அக்கறையின்றி நாலாவது வரிசையில் குச்சியாக அமர்ந்திருக்கும் ஒருத்தி" (ஆயிஷா, ப.6) என்று உரைப்பதினால் உணரமுடிகின்றது. அவளது தோற்றம் ஈர்ப்பற்றதாகக் காணப்படுவதாலேயே அவளது கவனம் முழுவதும் படிப்பின் மீது இருப்பதைக் குறுநாவல் உரைக்கின்றது.

**முடிவுரை**

இரா. நடராசனின் புனைவுகளில் உளவியல் கூறுகளான தற்காப்பு நடத்தைகள் இடம்பெறுவது அவர் திட்டமிட்டு அமைந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஏனெனில் அவர் உளவியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். அதனால் தம் படைப்புகளில் உளவியல் கருத்துகளைப் படைத்திருக்கிறார். அனைத்து மக்களிடத்தும் இயல்பாகத் தோன்றும் இத்தகைய கூறுகளை தமது படைப்புகளில் சரியான இடத்தில் கதைமாந்தர்களின் வழியே தெளிவுற உணர்த்துகிறார் இரா. நடராசன். தனக்கென்று ஒரு பிரச்சினை ஏற்படும் பொழுது அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஏதேனும் காரணம்காட்டி தப்பித்துக் கொள்ளுதலைக் காரணம் புனைந்துரைத்தல் என்னும் கூறும், தம்மை ஒரு பிரச்சினையிலிருந்து நீங்கி அதற்கான விடையைத் தேடும் செயலை நசுக்குதல் என்னும் கூறும், பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ளுதலை பின்வாங்குதல் என்னும் கூறும், ஒருபிரச்சினையிலிருந்து நீக்கி மற்றொரு செயலில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொள்ளுதலை ஈடுசெய்தல் என்னும் கூறும் உணர்த்துகின்றன.

**துணைநூல்கள்**


1. நடராசன். இரா., 2011, இரா. நடராசன் சிறுகதைகள், பாரதி புத்தகாலயம், சென்னை
2. நடராசன். இரா., 2012, ஆயிஷா, புக்ஸ் பார் சில்ரன், சென்னை.
3. நடராசன். இரா., 2007, பூஜ்ஜியமாம் ஆண்டு, பாரதி புத்தகாலயம், சென்னை
4. நாகராஜன், கி., 2009, கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல், இராம் பதிப்பகம், சென்னை.
5. இரவிச்சந்திரன், தி.கு., 2015, சிக்மண்ட் ஃப்ராய்ட், அலைகள் வெளியீட்டகம், சென்னை.